**ஏப்ரல் – 26**


# TNPSC துளிகள்

- நீதிக்கட்சித் தலைவரும், மதராஸ் மாகாணத்தின் முன்னாள் முதல் அமைச்சருமான P.T. இராஜனின் வாழ்க்கை மற்றும் மரபு குறித்த 'திராவிட அறநெறியாளர் தமிழ்வேல் P.T. இராஜன் வாழ்வே வரலாறு' என்ற ஒரு புத்தகத்தினை தமிழக முதலமைச்சர் வெளியிட்டுள்ளார்.
- தொலைத்தொடர்புத் துறையின் (DoT) கம்பிவடச் சேவைத் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு இணை ஆலோசகர் M.ரேவதியை சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தில் (ITU) உள்ள வானொலி தகவல் தொடர்பு வாரியத்தின் இயக்குநர் பதவிக்காக என்று இந்திய அரசினால் பரிந்துரைக்கப் படும் ஒரு வேட்பாளராக இந்தியா அதிகாரப்பூர்வமாக பரிந்துரைத்துள்ளது.
- அமராவதியில் இந்தியாவின் முதல் துளிமக் கணினியியல் கிராமத்தினை நிறுவுவதில் ஆந்திரப் பிரதேச மாநில அரசு முன்னேற்றம் கண்டுள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தின் "Power Hungry: How AI Will Drive Energy Demand" என்ற ஒரு அறிக்கையின் படி, உலகளாவிய அமைப்புகளில் செயற்கை நுண்ணறிவினை ஒருங்கிணைப்பது 2025 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஆண்டுதோறும் உலகளாவிய உற்பத்தியைச் சுமார் 0.5 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தெலுங்கானா மாநில அரசாங்கமும் முன்னணி ஜப்பானிய நிறுவனங்களும் இணைந்து ஐதராபாத்தில் ஒரு சுற்றுச்சூழல் நகரத்தினை நிறுவ உள்ளன.
- காதி மற்றும் கிராமத் தொழில்துறைகள் ஆணையம் (KVIC) ஆனது, 2024-25 ஆம் நிதியாண்டில் 1.70 லட்சம் கோடி ரூபாய் வருவாயைப் பதிவு செய்து, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- காட்டு எருதுகளின் கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பை அங்கீகரிக்கும் விதமாக, நேபாள அரசாங்கம் ஆனது ஏப்ரல் 20 ஆம் தேதியை தேசியக் காட்டு எருதுகள் தினமாக அறிவித்துள்ளது.
- அமெரிக்கத் துணை அதிபர் J.D. வான்ஸ் பதவியேற்ற பிறகு இந்தியாவிற்கு முதல் முறையாக சமீபத்தில் வருகை தந்தார்.
- கோயம்புத்தூர் நகரில் உள்ள கங்கா மருத்துவமனையானது, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான கடுமையான மூட்டுத் தாக்கம், மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் மூட்டு அகநோக்கி வழி (ஆர்த்ரோஸ்கோபி) அறுவைச் சிகிச்சைகளில் ஒரு உலகளாவியச் சிறப்பு மையமாக (GCOE) நியமிக்கப்பட்டு உள்ளது.
    - இது உலகில் மூட்டுத் தாக்கத்தின் விளைவு மாற்று அறுவை சிகிச்சை என்பதற்கான முதல் GCOE மையமாகும்.
- புது டெல்லியில் உள்ள தேசிய ஊக்கமருந்து சோதனை ஆய்வகத்தில் உலகின் 17வது தடகள வீரர்களுக்கான உடல்நிலைத் தகவல் பதிவேடு மேலாண்மைப் பிரிவினை இந்தியா திறந்து வைத்துள்ளது.

- இது விளையாட்டு வீரர்களின் உடலியல் தகுதிசார் தகவல் பதிவேடுகளை மிக நன்கு கண்காணித்து நிர்வகிப்பதற்கும், நியாயமான விளையாட்டுப் போட்டிகளை உறுதி செய்வதற்கும், மிகவும் தூய்மையான முறையிலான விளையாட்டுப் போட்டிகளின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறப்புப் பிரிவாகும்.

# தேசியச் செய்திகள்

## பசுமையில்ல வாயு உமிழ்வின் தீவிரத்தன்மைக்கான இலக்கு வரைவு விதிகள்




- 2023 ஆம் ஆண்டு கார்பன் மதிப்பு சார் வர்த்தகத் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டு பசுமை இல்ல வாயு உமிழ்வின் தீவிரத் தன்மை குறித்த இலக்கு விதிகளை அறிமுகப் படுத்தும் வரைவு அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- இந்த முதன்மை விதிகளானது எரிசக்திப் பாதுகாப்பு சட்டம் 2001 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 ஆகியவற்றின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.
- இது எரிசக்தித் திறன் வாரியத்தினால் (BEE) நன்கு அமல்படுத்தப்படும் என்பதோடு இது நியமிக்கப்பட்ட தொழில்துறைகளுக்கான உமிழ்வு தீவிரத் தன்மை இலக்குகளை முன் மொழிகிறது.
- 2023-24 ஆம் ஆண்டு அடிப்படை தரவுகளின் அடிப்படையில், 2025-26 முதல் 2026-27 ஆம் ஆண்டு வரையிலான ஒரு இணக்கக் காலத்திற்கு, ஒரு டன் உற்பத்தியில் $CO_2$ வாயு உமிழ்விற்குச் சமமான உமிழ்வுகளின் அடிப்படையில் சில இலக்குகள் வரையறுக்கப் படும்.
- அலுமினியம் மற்றும் சிமென்ட் போன்ற அதிக உமிழ்வு வெளியிடும் துறைகளையும் இந்த விதிகள் உள்ளடக்கும்.
- வேதாந்தா, ஹிண்டால்கோ, NALCO மற்றும் அல்ட்ராடெக் சிமெண்ட் போன்ற சில நிறுவனங்கள் குறிப்பிட்ட அடிப்படை மற்றும் இலக்கு மதிப்புகளை ஒதுக்கியுள்ளன.
- உதாரணமாக, 2023-24 ஆம் ஆண்டில் 12,38,336 டன் அலுமினியத்தினை உற்பத்தி செய்த ஒடிசாவின் ஜார்சுகுடாவில் உள்ள வேதாந்தாவின் ஸ்மெல்டர் II ஆனது, 2025-26 மற்றும் 2026-27 ஆகிய ஆண்டுகளில் முறையே 13.2260 மற்றும் 12.8259 டன் பசுமை இல்ல வாயு உமிழ்வு தீவிரத் தன்மையினைக் குறைக்க வேண்டும்.

## SVEC நுழைவு இசைவுச் சீட்டு

- பாகிஸ்தான் குடிமக்கள் இனி SAARC நுழைவு இசைவுச் சீட்டு விலக்கு திட்டத்தின் (SVES)

கீழான நுழைவு இசைவுச் சீட்டுகளின் மூலம் இந்தியாவிற்குப் பயணிக்க அனுமதிக்கப் பட மாட்டார்கள்.

- SVEC என்பது SAARC நுழைவு இசைவுச் சீட்டு விலக்கு என்ற திட்டத்தின் சுருக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், சில வகைப் பிரமுகர்களுக்கு சிறப்பு பயண ஆவணம் வழங்கப் படுகிறது.
- இந்தச் சிறப்பு ஆவணமானது, அவர்களுக்கு நுழைவு இசைவுச் சீட்டுகள் மற்றும் பிற பயண ஆவணங்களுக்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்கிறது.
- தற்போது, இப் பட்டியலில் பல்வேறு முக்கியப் பிரமுகர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மூத்த அரசாங்க அதிகாரிகள், தொழிலதிபர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உட்பட 24 வகை மக்கள் உள்ளனர்.

Pakistani nationals will not be permitted to travel to India under the **SAARC Visa Exemption Scheme (SVES)** visas. Any SVES visas issued in the past to Pakistani nationals are deemed cancelled. Any Pakistani national currently in India under SVES visa has **48 hours** to leave India.

## சர்வதேசச் செய்திகள்

### பசுமை சார் இணைய சங்கேதப் பண முன்னெடுப்பு- பூடான்




- பூடான் அரசானது, அதன் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கும், அறிவுப் புலப் பெயர்தலைக் குறைப்பதற்காக வேண்டி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் நீர் மின்னாற்றலைப் பயன்படுத்தி பசுமை சார்ந்த இணைய சங்கேதப் பணங்களை உருவாக்கிப் பயன்படுத்துவதற்குமான வழிகளை ஆராய்ந்து வருகிறது.
- பசுமை சார் இணைய சங்கேதப் பணங்கள் என்பது புதைபடிவ எரிபொருளுக்குப் பதிலாக காற்று, நீர் அல்லது சூரிய ஆற்றல் போன்ற சில தூய்மையான ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் எண்ணிம நாணயங்கள் ஆகும்.

- பூடான் ஆனது முழுமையாக நீர் மின்னாற்றலில் இயங்குகிறது மேலும் பூடானில் நீர் மின்னாற்றலைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் ஒவ்வொரு எண்ணிம நாணயமும் புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் நாணயத்திற்கு ஈடாக அமைகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## Bullseye அண்டம்





- சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழுவானது, சமீபத்தில் ஹப்பிள் விண்வெளி தொலை நோக்கியைப் பயன்படுத்தி ஒன்பது வளையங்களைக் கொண்ட ஓர் அண்டத்தினைக் கண்டறிந்துள்ளது.
- முன்னதாக கண்டறியப்பட்ட வளையங்களைக் கொண்ட அண்டங்கள் இரண்டு அல்லது மூன்று வளையங்களை மட்டுமே கொண்டிருந்ததால், அந்தக் குழு இதை "தற்செயலான கண்டுபிடிப்பு" என்று அழைத்தனர்.
- இந்தச் அசாதாரண அண்டத்திற்கு LEDA 1313424 என்று பெயரிடப்பட்டுள்ளது ஆனால் அதன் பொதுவான பெயர் Bullseye அண்டமாகும்.
- அந்த இரண்டு அண்டங்களும் சுமார் 130,000 ஒளி ஆண்டுகள் (அல்லது 1.22 பில்லியன் பில்லியன் கிலோ மீட்டர்) தொலைவு இடைவெளியில் அமைந்திருந்தாலும் அவற்றை இணைக்கும் ஒரு மெல்லிய வாயுப் பாதை இருப்பதாக இக்குழு தெரிவித்துள்ளது.
- இந்த அண்டமானது, சுமார் 250,000 ஒளி ஆண்டுகள் விட்டம் கொண்ட பால்வெளி அண்டத்தினை விட சுமார் 2.5 மடங்கு பெரியதாகும்.
- Bullseye அண்டமானது, ஒரு நாள் ஒரு பெரிய குறைந்த மேற்பரப்பு ஒளிர்வு (GLSB) கொண்ட அண்டமாகப் பரிணமிக்கக் கூடும் என்பதற்கான சிலபல அறிகுறிகளையும் கொண்டுள்ளது.
- குறைந்த மேற்பரப்பு ஒளிர்வு கொண்ட அண்டங்களில் மிகப்பெரியவை மிகப்பெரிய குறைந்த மேற்பரப்பு ஒளிர்வு (GLSB) கொண்ட அண்டங்கள் ஆகும்.

- அனைத்து GLSB அண்டங்களும் உண்மையிலேயே பிரம்மாண்டமானவையாகும்.
- மாலின் 1 எனப்படும் மிகவும் பிரபலமான GLSB-ஆனது, பால்வெளி அண்டத்தினை விட தோராயமாக 6.5 மடங்கு அகலமானது மற்றும் அது அறியப்பட்ட மிகப்பெரியச் சுழல் அண்டங்களில் ஒன்றாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 2025 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் - IMF

- உலகப் பொருளாதாரத்திற்கான வளர்ச்சி மீதான முன் கணிப்பு ஆனது, முந்தைய சில மதிப்பீடுகளிலிருந்து அரை சதவீதப் புள்ளி குறைந்து அது 2.8% ஆகக் குறைக்கப் பட்டு உள்ளது.
- சீனாவைப் பொறுத்தவரையில், 2025 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட புதுப்பிப்பு அறிக்கையில் 4.6 சதவீதத்திலிருந்து 4.0 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் பொருளாதாரம் ஆனது, 2025 ஆம் ஆண்டில் 6.2 சதவீதமாகவும், 2026 ஆம் ஆண்டில் 6.3 சதவீதமாகவும் வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- அமெரிக்கப் பொருளாதாரத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கணிப்பு 1.8% ஆகக் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதக் கணிப்பை விட சுமார் ஒரு சதவீதப் புள்ளி குறைந்துள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## விஸ்டன் 2025 விருதுகள்

- இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா உலகின் மிக முன்னணி ஆடவர் கிரிக்கெட் வீரராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு விஸ்டன் கிரிக்கெட் வீரர்களுக்கான அல்மனாக் பதிவேட்டின் மகளிர் பிரிவில் ஸ்மிருதி மந்தனா இந்த விருதினைப் பெற்றுள்ளார்.

- இந்த விருது தொடங்கப்பட்டதிலிருந்து இரண்டு முறையாக இந்த விருதினைப் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை மந்தனா பெற்றுள்ளார்.
- அவர் ஏற்கனவே 2018 ஆம் ஆண்டில் இந்த விருதினைப் பெற்றுள்ளார்.
- வெஸ்ட் இண்டீஸ் அணியின் நிக்கோலஸ் பூரன் உலகின் முன்னணி T20 வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




# இதரச் செய்திகள்

## பஹல்காம் தீவிரவாத தாக்குதல்





- ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 26 பேர் (பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகள்) கொல்லப்பட்டனர்.
- பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் ஒரு பிரிவான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (TRF) இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது.
- இந்தச் சம்பவத்திற்குப் பதில் நடவடிக்கை எடுக்கும் விதமாக, பாகிஸ்தானுடனான பல தசாப்த காலத்திய சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா காலவரையின்றி நிறுத்தி

வைத்துள்ளது.

- இதன் மூலம், சிந்து நதி மற்றும் ஜீலம், செனாப், ராவி, பியஸ் மற்றும் சட்லஜ் ஆகிய அதன் கிளை நதிகளிலிருந்து நீர் வழங்கீடு நிறுத்தப்படும்.
- இந்த சிந்து நதி நீர் ஒப்பந்தம் ஆனது 1960 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதியன்று கையெழுத்தானது.
- உலக வங்கியினால் இடையீடு செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம் ஆனது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தம் ஆனது 1965, 1971 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற மூன்று முக்கியப் போர்களைக் கடந்தும் நடைமுறையில் இருந்தது ஆனால் தற்போது இது காலவரையின்றி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியான அட்டாரி-வாகா எல்லையானது உடனடியாக அமலுக்கு வரும் வகையில் மூடப்பட்டது.
- புது டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில்/உயர் ஆணையத்தில் உள்ள கடற் படை மற்றும் விமானப் படை ஆலோசகர்கள் போன்றப் பாதுகாப்பு அல்லது இராணுவ அதிகாரிகளை வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய உயர் ஆணையத்தில் இருந்து இந்தியா கடற்படை, விமானப் படை போன்ற தனது பாதுகாப்பு ஆலோசகர்களைத் திரும்ப அழைத்துள்ளது.
- இங்கு உயர் ஆணையங்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கையானது மேலும் குறைக்கப் படுவதன் மூலம், தற்போதைய 55 எண்ணிக்கையிலிருந்து 30 ஆகக் குறைக்கப்படும் என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதிக்குள் நடைமுறைக்கு வரும்.

## இந்தியாவின் மிக நீளமான இரயில் சுரங்கப்பாதை – உத்தரகாண்ட்




- 14.58 கிலோ மீட்டர்கள் நீளம் கொண்ட இந்தியாவின் மிகவும் நீளமானப் போக்குவரத்து சுரங்கப் பாதையானது, சுரங்கப் பாதை எண். 8 அல்லது ஜனசு சுரங்கப் பாதை என்று அழைக்கப் படுகிறது.
- இது ரிஷிகேஷ்-கர்ணபிரயாக் பாதையின் (உத்தரகாண்ட்) தேவ்பிரயாக் முதல் ஜனசு வரையிலான பகுதியில் அமைந்துள்ளது.
- இந்த ரிஷிகேஷ்-கர்ணபிரயாக் ரயில் போக்குவரத்து இணைப்புப் பாதையானது 125.20 கிலோ மீட்டர் நீளம் கொண்டது.

- இதில், 104 கி.மீ அல்லது 83 சதவீதப் பாதை சுரங்கப் பாதையாக உள்ளது.
- தற்போது, இந்தியாவின் மிகவும் நீளமான இரயில் சுரங்கப் பாதையானது காஷ்மீர் பாதையின் கத்ரா-பனிஹால் பிரிவில் உள்ள காரி மற்றும் சம்பர் நிலையங்களுக்கு இடையில் உள்ள 12.75 கிலோ மீட்டர் நீளம் கொண்ட பாதையாகும்.
- மணாலி-லே நெடுஞ்சாலையில் உள்ள சுமார் 9.02 கி.மீ நீளம் கொண்ட அடல் சுரங்கப் பாதையானது மிக நீளமான சாலைப் போக்குவரத்து சுரங்கப் பாதை ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★